


நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் உள்ள அந்தோணி ரெசிடென்சி கூட்டரங்கில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், சிப்காட் தொழில் நண்பன் சந்திப்பு, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலான் இயக்குனர் வே.விஷ்ணு, சிப்காட் மேலாண்மை இயக்குனர் டாக்டர். கே.செந்தில்ராஜ், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

### விழுப்புரம் மாவட்டம் - திண்டிவனம் அருகே மின்சாரம் தாக்கி

# உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,பிப்.27-

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே மின்சாரம் தாக்கி உயிரிழந்த சிறுவனின் பொற்றோருக்கு நிதியுதவி வழுங்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம் மற்றும் நகரம், பெலாகுப்பம் ரோடு, பாரதிதாசன் பேட்டையைச் சேர்ந்த செல்வன். தேவேந்திரன் (வயது 9) த/பெ. மாரி என்பவர் கடந்த 23.02.2024 அன்று மாலை குடிநீர் தொட்டியில் தண்ணீர் நிரப்புவதற்காக மின்மோட்டாரைப் பயன்படுத்தும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி மயங்கி கீழே விழுந்து, உடனடியாக சிகிச்சைக்காக அருகிலுள்ள திண்டிவனம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# வேலூரில் தி.மு.க. தேர்தல் அறிக்கை தொடர்பாக கருத்து கேட்புக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது!

வேலூர், பிப். 27-

வேலூரில் தி.மு.க கருத்துக் கேட்பு கூட்டம் நடந்தது. நிகழ்ச்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமை தாங்கி பேசினார்.

அவர் பேசியதாவது:-

தி.மு.க தேர்தல் அறிக்கை தொடர்பாக பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரிடம் கருத்துக் கேட்பு கூட்டம் வேலூரில் நடந்தது. நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் தொழில் முனைவோர், மாணவர்கள், பொதுமக்கள், உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் பல்வேறு கருத்துக்களை கேட்டு அவற்றை ஒருங்கிணைத்து தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு தேர்தலுக்கு முன்பு ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் ரூ.15 லட்சம் கொடுப்பதாக பா.ஜ.க.கூறியது. அதனை ஒவ்வொருவரின் வங்கி கணக்கிற்கு முதலில் செலுத்தி விட்டு, அதன் பிறகு மற்ற கட்சிகளை அவர்கள் விமர்சிக்கலாம் .

இந்தியாவில் அனைத்துக் கட்சிகளையும் சேர்த்தால் கூட 30 சதவீத தேர்தல் பத்திரம் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் பா.ஜ.க.வுக்கு 50சதவிததேர்தல் பத்திரங்கள் கிடைத்துள்ளது. கட்சிக்கு பணம் சேர்ப்பதற்காக தவறான சட்ட வடிவம் கொண்டு வந்துள்ளனர். அதனை சுப்ரீம் கோர்ட்டுதற்போது சுட்டிக் காட்டி உள்ளது. தமிழ்நாட்டில் கடந்த முறை தவறான ஆட்சி நடத்தி மாநிலத்தை பின்னுக்கு தள்ளியவர் எடப்பாடி பழனிச்சாமி, ஆனால் தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. ஆட்சியை எப்படி நடத்தி இருக்க வேண்டும் என தெரியாமல் எடப்பாடி தற்போது தி.மு.க. ஆட்சி குறித்து விமர்சிக்கிறார் .

கருத்துக்களை தெரிவிக்கும் அனைத்துக் கட்சியினருக்கும் ஒருவித அழுத்தம் தரப்படுகிறது .

டெல்லியில் போராட்டம் நடத்தும் விவசாயிகள் மீது தீவிரவாதிகளிடம் காட்டுவதை போன்ற அணுகு முறையை ஒன்றிய அரசு காட்டுகிறது. விவசாயிகள் மீது கண்ணீர் புகை கொண்டு வீச்சு, இரும்பு கம்பிகளால் தாக்குவது , போன்றவை நடத்தப்படுகிறது. நியாயமான உரிமைக்கு போராடும் அவர்களைஒடுக்க முயல்கின்றனர். செய்யாறு சிப்காட் தொடர்பாக அமைச்சர் தரப்பினர் பேசி தீர்வு காண்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் 29-02-2024 வியாழக்கிழமை காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில், விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா.தமிழ்மணி, எஸ்.கே.வேதரத்தினம் - விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், நாகை ஆர்.அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா.செந்தமிழ்செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் - விவசாய துணைச் செயலாளர்கள் முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், டி.எம்.அரியப்பன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என். மணி, இராமநாதபுரம் என்.நல்லசேதுபதி, திருப்பத்தூர் கே. புருஷோத்தமன், கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள் : 1. எல்லோருக்கும் எல்லாம் எனும் தாரக மந்திரத்துடன் 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

2. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் - குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 25.02.2024

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி



கடலூர் மாநகர செயற்குழு கூட்டம் மற்றும் வார் ரூம் திறப்பு விழா மாநகரக் கழக செயலாளர் கே.எஸ். ராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் இள புகழேந்தி, மாநகர மேயர் சுந்தரி ராஜா முன்னிலை வகித்தனர். கடலூர் தொகுதி பார்வையாளர் அங்கையற்கண்ணி சிறப்புரையாற்றினார், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ எம்.பி,, கடலூர் நாடாளுமன்ற தொகுதி, சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வார்ரூம்களைத் திறந்து வைத்து, வாக்குச்சாவடி பாகமுகவர் செயல்பாடுகள் பற்றி விளக்க உரையாற்றினார். முன்னாள் எம்.எல்.ஏ., கே. எஸ் .ரவிச்சந்திரன், வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான் .ஜே.பச்சையப்பன் வழக்கறிஞர்கள் பி.அருள் ஜோதி, எஸ்.ராஜதுரை மாநகர அவைத்தலைவர் பழனிவேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட மாநகர கழக நிர்வாகிகள், வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள், சார்புஅணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

### க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# கே.கருணாநிதி மகள் பி.இலக்கியா மறைவு!

### முதல்வர்-தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.27-

கரூர் மாவட்டம் க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதியின் மகள் திருமதி. பி. இலக்கியாவின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கரூர் மாவட்டம் க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதியின் மகள் திருமதி பி.இலக்கியா மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

தனது அன்பு மகளை இழந்து தவிக்கும் ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 3 வது புத்தகத் திருவிழாவை கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி துவக்கி வைத்து புத்தக அரங்கினை பார்வையிட்டார்.உடன் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் விஜி.இராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) என்.ஒ.சுகபுத்ரா. மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத் தலைவர் (கவிதா பப்ளிகேஷன்) சேதுசொக்கலிங்கம், செயலாளர்.முருகன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன் உள்பட பலர் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் எ.வ.வேலு - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - பி.மூர்த்தி பங்கேற்பு!

# சேலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு புகைப்படக் கண்காட்சி!

## புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாடு!

## அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைக்கிறார்!

சேலம், பிப். 27-

நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு வரலாற்று சிறப்பு புகைப்படக் கண்காட்சி இன்று (27.2.2024) முதல் 29.2.2024 வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை சேலம் டி.எஸ். கே.மஹாலில் நடைபெறுகிறது. முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி நடைபெறும் இப்புகைப்பட கண்காட்சியினை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைக்கிறார்.

இப்புகைப்படக் கண்காட்சி திறப்பில் அமைச்சர்கள் எ.வ.வேலு ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி மற்றும் மாவட்டச் செயலாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க புகைப்படக் கண்காட்சி ஏற்பாட்டை புகைப்பட நிபுணர் கோவை சுப்பு செய்துள்ளார்.

### மு.சண்முகம் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள சாக்கோட்டை பகுத்தறிவு அரசு உதவி பெறும்

# தொடக்கப் பள்ளி கட்டிடத் திறப்பு விழா! திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திறந்து வைக்கிறார்!

### மு.சண்முகம் எம்.பி. - சு.கல்யாணசுந்தரம் எம்.பி.- க.அன்பழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, பிப்.27-

மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சாக்கோட்டை பகுத்தறிவு தொடக்கப் பள்ளி கட்டிடத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் 28.02.2024 அன்று திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சி பற்றிய விவரம்:

கும்பகோணம் சாக்கோட்டை கிராமத்தில் தந்தை பெரியார் அவர்களால் 1945 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட பகுத்தறிவு ஆரம்பப் பள்ளிக்கு தி.மு.கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினர் மு. சண்முகம் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 50 லட்சம் ஒதுக்கப்பட்டு, கட்டிடப் பணிகள் துவங்கி நிறைவு பெற்றுள்ளது.

அக்கட்டிடத்தின் திறப்பு விழா 28.02.2024 புதன்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு கழக மாநிலங்களவை உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் அவர்கள் தலைமை வகிக்கிறார். நிகழ்ச்சிக்கு வருபவர்களை சாக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான க.அன்பழகன் வரவேற்றுப் பேசுகிறார்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினருமான செ.இராமலிங்கம், அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன் எம்.எல்.ஏ.. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் க.நசீர்முகம்மது, மாவட்ட துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, மாவட்டப் பொருளாளர் ஜெ.நடராஜன் எம்.சி., குடந்தை மத்திய ஒன்றியச் செயலாளர் டி.கணேசன், குடந்தை மேற்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.கே.முத்துச்செல்வம், குடந்தை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர், குடந்தை மாநகரச் செயலாளரும், குடந்தை மாநகர துணை மேயருமான ப.ப. தமிழழகன், குடந்தை ஒன்றிய பெருந்தலைவர் காயத்திரி அசோக்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் சுதா இராஜேந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.செல்லப்பா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

தொ.மு.ச. பேரவைச் செயலாளரும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. குடந்தை மண்டலப் பொதுச்செயலாளருமான எஸ்.பாண்டியன், சங்கத் தலைவர் ஜி.சங்கரன், பொருளாளர் எஸ். திருவரசமூர்த்தி, பேரவைச் செயலாளரும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனின் தலைவருமான கோ.சி.வள்ளுவன், மாடாகுடி செல்வராஜ் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள், நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

பள்ளி தாளாளர் என். கோவிந்தராஜுலு நன்றி கூறுகிறார்.



தேனி மாவட்டம் தென்கரை பேரூராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் நீரூற்று நிலையத்தை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். உடன் தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ்.மற்றும் கவுன்சிலர்கள் கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம், மண்டலவாடி கிராமத்தில் நடைபெற்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான எருது விடும் நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ., சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர் சிவபிரகாசம் மற்றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.